# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2020–ம் வருடம் நவம்பர் மாதம் 03–ம் தேதி காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## பொருட்கள்

1)இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட விபரப்படியான சாலைகள் இயற்கை இடர்பாடுகளினாலும் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் சாலைகளில் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகளினால் தோண்டப்பட்டு சேதமடைந்துள்ளது. மேற்படி சாலைகளை **சிறப்பு சாலைகள் திட்டம் 2020–2021–ன் கீழ் சிப்பம் 1 மற்றும் சிப்பம் 2–ஆக** சாலைப்பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**SRP ROAD LIST 2020-2021**
**PACKAGE-I**

| Sl No | Name of the ULB | Name of the Road | Length of the road in KM | Width of the Road in (M | Proposal to be taken up | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Type BT/CC | Amount Rs. In Crores |
| 1 | Padmanabha puram | Improvements of Market Road | 0.950 | 5.50,7.50 | BT, Paver block | 0.54 |
| 2 | | Improvements of Gnaniyar street | 0.095 | 3.00 | Paver block | 0.08 |
| 3 | | Improvements of Danamudukku | 0.250 | 3.60 | Paver block | 0.16 |
| 4 | | Improvements of Charode | 0.700 | 5,70 | BT | 0.36 |
| 5 | | Improvements of Kottai Backside to Chanthai vali road | 1.200 | 4.75,4.50 | BT, Paver block | 0.66 |
| 6 | | Improvements of Ramar Parambu | 0.400 | 3.00 | Paver block | 0.20 |
| | **Total** | | **3.595** | | | **2.00** |

**SRP ROAD LIST 2020-2021**
**PACKAGE-II**

| Sl No | Name of the ULB | Name of the Road | Length of the road in KM | Width of the Road in (M | Proposal to be taken up | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Type BT/CC | Amount Rs. In Crores |
| 1 | **Padmanabha** | *Improvements of Padmanabhapuram south* | 0.215 | 7.20 | BT | 0.16 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **puram** | *street road* | | | | |
| **2** | | *Improvements of Padmanabhapuram North street road* | 0.203 | 8.50 | BT | 0.14 |
| **3** | | *Improvements of Padmanabhapuram West street road* | 0.292 | 8.50 | BT | 0.18 |
| **4** | | *Improvements of Padmanabhapuram East street road* | 0.300 | 7.50 | BT | 0.2 |
| **5** | | *Improvements of Perumalkulam road* | 0.150 | 4.10 | Paver block | 0.13 |
| **6** | | *Improvements of Vazhavillai 1st street* | 0.200 | 3.00 | Paver block | 0.14 |
| **7** | | *Improvements of APMA 3rd street road* | 0.250 | 7.40,4.30 | Paver block | 0.17 |
| **8** | | *Improvements of Konar street* | 0.500 | 5.00 | BT | 0.21 |
| **9** | | *Improvements of Bharathi nagar road* | 0.500 | 3.60,4.30 | BT, Paver block | 0.19 |
| **10** | | *Improvements of Mullai nagar road* | 0.210 | 3.00 | BT | 0.11 |
| **11** | | *Improvements of Veticonam road* | 0.095 | 3.00 | Paver block | 0.27 |
| **12** | | *Improvements of Mudakullam road* | 0.380 | 4.50 | Paver block | 0.06 |
| **13** | | *Improvements of vazhavillali* | 0.100 | 3.00 | Paver block | 0.04 |
| | **Total** | | **3.395** | | | **2.00** |

மேற்படி சாலைகள் **2020–2021** திட்டத்தின் கீழ் அரசாணையில் வழிவகை செய்யப்பட்டுள்ள விகிதாசாரத்தின் படி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கிட வேண்டி மதிப்பீட்டு பிரேரணை மற்றும் கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.இத்துடன் இணைத்து சமர்ப்பித்துக்கொள்ளப்படுகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>நகர் மன்றத் தீர்மானம் எண்.1712</u>

தேர்வு செய்யப்பட்ட பணிகள் அங்கீகரிக்கப்பட்டது.

2)பத்மனாபபுரம் நகராட்சி பேருந்து நிலையத்திற்கு 1966-ம் ஆண்டில் நகரபுல எண். B8-89,B8-100-ல் நில ஆர்ஜிதம் செய்து விலைக்கு வாங்கப்பட்டு பேருந்து நிலையம் அமைக்கப்பட்டது. 2001-ம் ஆண்டில் செப்டிக் டாங்க் அமைக்கும் போது திருமதி. லைலா என்பவர் தனக்கு சொந்தமான இடம் உள்ளது என்ற பத்மனாபபுரம் சார்பு நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். நகராட்சிக்கு எதிராக தீர்புரை வர பெற்றது. அந்த தீர்ப்பாணையினை எதிர்த்து நகராட்சி மேல் முறையீட்டு மனு மீது சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் E.P.No.

39/2015 E.A.No. 1/2019 O.S. No. 383/2001-ன் படி வழக்கு தொடர்பாக CRP (MD) No/1373 and 1377 of 2019 மற்றும் C.M.P (MD) No. 7346 and 7360/2019 மதுரை உயர் நீதி மன்றத்தின் மூலம் EA 1/2019 மனுவுக்கு சாதகமாக நகராட்சிக்கு உத்தரவு தரப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள பொது கழிப்பிடமாக பல பகுதிகளில் இருந்து வந்து சேரும் கழிவு சேரும் இடமாக உள்ளதால் நகராட்சி இந்த பகுதியை பொது மக்கள் பயனுக்காக நில ஆர்ஜிதம் படுத்தி எந்த நிவாரணமும் கொடுக்கலாம் என்று நீதி மன்றத்தின் தீர்ப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தீர்ப்புரையின் அடிப்படையில் பொது மக்களின் நலன் கருதி தாலுகா சர்வேயர் மூலம் தேவையான இடத்தினை அளந்து நில ஆர்ஜிதம் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.4105/2001/ற்றி.பி.ஐ)

**<u>நகர் மன்றத் தீர்மானம் எண்.1713</u>**

அனுமதிக்கப்படுகிறது.

3) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் வாகனம் எண். TN75B4577-க்கு TATA ACE வாகனத்துக்கு வாகன விபத்து காப்பீடு பிரிமியம் செலுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.18061/-னை காசோலையாக யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட் நாகர்கோவில் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி தொகையினை தனி அலுவலர்/ஆணையர் முன்அனுமதி பெற்று செலுத்தியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி தொகையினை தனி அலுவலர்/ ஆணையர் முன் அனுமதி பெற்று செலுத்தியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1410/2017/அ2)

**<u>நகர் மன்றத் தீர்மானம் எண்.1714</u>**

அனுமதிக்கப்படுகிறது.

4)இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் வாகனம் எண். TN 75AM 2378TATA ACE வாகனத்துக்கு வாகன விபத்து காப்பீடு பிரிமீயம் செலுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.20034/-னை காசோலையாக யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ்

கம்பெனி லிட் நாகர்கோவில் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி தொகையினை தனி அலுவலர் /ஆணையர் முன் அனுமதி பெற்று செலுத்தியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:-பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர்/ஆணையர் முன் அனுமதி பெற்று மேற்படி தொகையினை செலுத்தியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர் மன்றத் தீர்மானம் எண்.1715**

அனுமதிக்கப்படுகிறது.

4)இந்நகராட்சி பொது சுகாதார வாகனம் எண். TN74D- 4151 கழிவு நீர் வாகனத்துக்கு தகுதி சான்று புதுப்பித்து கொள்ள தேவையான மராமத்து பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கும் அதற்காகும் உத்தேச செலவீன தொகை ரூ.90,000/- னை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும், அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- பொது சுகாதார அவசர அவசியம் கருதி மராமத்து பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவீனத்திற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 549/2009/அ2)

**நகர் மன்றத் தீர்மானம் எண்.1716**

அனுமதிக்கப்படுகிறது.

5)இவ்வலுவலக வருவாய் ஆய்வாளர் அவர்களின் அறிக்கையில் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 கதவு எண் 7A /21 எண் கொண்ட கட்டிடம் திருமதி பி. வசந்தகுமாரி என்ற பெயரில் வணிக பயன்பாடாக வரிவிதிப்பு செய்யப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது மேற்கண்ட கதவு எண் கொண்ட குடியிருப்புதாரர் புதிய வீடு கட்டி முடித்துள்ளார் எனவும் மேற்படி குடியிருப்புக்கு புதிய வரி விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி வீட்டு உபயோக பயன்பாடு அல்லாத குடிநீர் இணைப்பு வ்ரிவிதிப்பு எண்.151/013/00176- ஐ வீட்டு உபயோக பயன்பாடாக மாற்றம் செய்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 533/2020/இ1)

**நகர் மன்றத் தீர்மானம் எண்.1717**

அனுமதிக்கப்படுகிறது.

6)சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-2020-ன் கீழ் மாவட்ட ஆட்சியர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை எண். ஆ3/4068/2019, நாள் 15-10-2020-ன் படி கீழ்க்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1, | பத்மனாபபுரம் நகராட்சி- தக்கலை மேட்டுக்கடை பகுதியில் அமைந்துள்ள அரசு முஸ்லீம் துவக்கப்பள்ளியில் போர்வெல் அமைத்து மாணவர்கள் பயன்படுத்தும் விதத்தில் குடிநீர் விநியோக வசதி செய்தல். | 2.00 |

மேற்கண்ட விவரப்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 879/2020/இ1)

**நகர் மன்றத் தீர்மானம் எண்.1718**

பார்வையிட்டு பதிவு செய்யப்படுவதுடன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதிக்கப்படுகிறது.

7)இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் வாகனம் TN74D 4151-க்கு மராமத்து பணிகள் மேற்கொள்ள 21/10/2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1, | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் | 74930/- |
| 2. | K.S.S ஆட்டோமொபைல்ஸ் நாகர்கோவில் | 81890/- |
| 3 | A.R.K. ஆட்டோ மொபைல்ஸ் நாகர்கோவில் | 80890/- |

மேலே வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 2 மற்றும் 3-ல் காணும் ஒப்பந்தப்புள்ளிகளை விட வ.எண்.1-ல் காணும் கணேஷ் மோட்டார்ஸ் நாகர்கோவில் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மிக குறைவாக உள்ளது. எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த கணேஷ் மோட்டார்ஸ் நாகர்கோவில் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்குவதற்கும் மேலும் அவசர அவசியம் கருதி தனி அலுவலர்/ஆணையர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர்/ஆணையர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 549/2009/அ2)

**நகர் மன்றத் தீர்மானம் எண்.1719**

குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுவதுடன், முன் அனுமதியும் அங்கீகரிக்கப்படுகிறது.

8)பத்மனாபபுரம் நகராட்சிப் பகுதியில் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் (ODF+) இல்லாத நகராட்சியாக அறிவித்திட 15/10/2020 க்குள் நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,திருநெல்வேலி அலுவலக மின்னஞ்சல் கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மீது நடவடிக்கையாக தனி அலுவலர், பத்மனாபபுரம் நகராட்சி அனைத்துப் பள்ளிகள், மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் இருப்பிட சமுதாய நலச்சங்கங்கள் (RWA) ஆகியவர்களிடம் 21 வார்டு பகுதிகளிலும் திறந்த வெளிக் கழிப்பிடம் இல்லாத நகராட்சி என உரிய உறுதி மொழி படிவங்கள் பெறப்பட்டுள்ளது. மேலும் ஆலோசனை மற்றும் ஆட்சேபணையினை பொது மக்களிடம் இருந்து பெறுதல் குறித்து விளம்பரப்படுத்தும் விதத்தில் 31/10/2020 முதல் தொலைக்காட்சி வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், திடக்கழிவு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் LCV வாகனங்களின் மூலம் ஒலிபரப்பும் செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் அனைத்து வீடுகளிலும் தூய்மை இந்தியா திட்ட இலக்குப்படி தனிநபர் கழிப்பிடங்கள் (IHHL) மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் (CT) கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தற்போது நகரின் 21 வார்டுகளுக்குட்பட்ட அனைத்துப் பகுதியிலும் கழிப்பிடங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே மேற்படி நடவடிக்கையின் அடிப்படையில் இந்நகராட்சியில் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகராட்சி(ODF+) என அறிவித்திடவும் மேலும் இப்பொருள் குறித்த செலவீனத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 657/2015/அ2)

**<u>நகர் மன்றத் தீர்மானம் 1720</u>**

(ODF+) நகராட்சியாக அறிவிப்பு வெளியிடவும், அதற்கான செலவீனத்திற்கும் அனுமதிக்கப்படுகிறது.